விருதுநகர் மாவட்டம், விருதுநகர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் பொதுமக்களுக்கு உயர்தர மருத்துவச் சேவைகளை விரிவுபடுத்தும் நோக்கில், சுமார் ரூ.1 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள புதிய மருத்துவ வசதி பிரிவுகளை மாவட்ட வருவாய் அலுவலர் ரா.ஆனந்தி தலைமையில், விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன் முன்னிலையில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் மற்றும் நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்கள். உடன் சேர்மன் சுப்பாராஜ், திருச்சுழி ஒன்றிய செயலாளர் பொன்னுத்தம்பி, நகரச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.தனபாலன், விளையாட்டு மேம்பாட்டு அணி கே.ஜி.ராஜகுரு, அரசு போக்குவரத்து கழக பொதுச் செயலாளர் ராஜ செல்வம், துணைச் செயலாளர் ஏ.எஸ்.கே.ரமேஷ் குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் ஒன்றியத்துக்குட்பட்ட விருப்பாச்சி ஊராட்சி பொதுமக்களுக்கு பட்டா வழங்கிய206 குடும்பங்களுக்கு இடங்களை ஒப்படைத்து உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி பேசுகையில், தமிழ்நாடு முதலமைச்சர் எல்லோருக்கும் எல்லாம் என்ற வகையில் சாதி,மதம், கட்சி வேறுபாடு பார்க்காமல் அனைவருக்கும் அனைத்துத் திட்டங்களையும் செய்துவருகிறார், தமிழகத்தில் இதுவரை 23 லட்சம் இலவச வீட்டு மனை பட்டாக்கள் வழங்கி சரித்திர சாதனை படைத்துள்ளார் தமிழ்நாடு முதலமைச்சர். ஒட்டன்சத்திரம் தொகுதியில் 60226 மகளிர்க்கு மகளிர் உரிமைத் தொகை வழங்கப்பட்டுள்ளது.வேறுபாடு பார்க்காமல் திட்டங்களை நிறைவேற்றி வரும் முதலமைச்சருக்கு நீங்கள் என்றென்றும் ஆதரவு அளிக்க வேண்டும் என்று பேசினார். நிகழ்வில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் கங்காதரணி, கோட்டாட்சியர் கண்ணன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் காமராஜ் பிரபு பாண்டியன், வட்டாட்சியர் சஞ்சய்காந்தி, ஒன்றிய செயலாளர் தர்மராஜன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் செந்தில்நாதன், ரத்தினம் மா. செல்வராஜ், பழனிச்சாமி, முன்னாள் கூட்டுறவு சங்க தலைவர் குப்புசாமி, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் அசோக் வேலுச்சாமி உள்ளிட்ட நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர். படம். திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் ஒன்றியம் விருப்பாச்சியில் பயனாளிகளுக்கு இடம்ஒப்படைப்பு செய்யும் விழாவில் அமைச்சர்அர. சக்கரபாணி பேசினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மதுரை அறிவுரைக் குழுமத்திற்கென, மதுரை வடக்கு வட்டம், ரேஸ்கோர்ஸ் காலனியில் 1 கோடியே 45 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள அலுவலகக் கட்டடத்தை காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்ததை தொடர்ந்து வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மதுரை அறிவுரைக் குழுமத்தின் தலைவரும் ஓய்வுபெற்ற நீதியரசருமான அருணா ஜெகதீசன் அவர்கள், உறுப்பினர்கள் ஓய்வு பெற்ற நீதியரசர்கள் எஸ். பாஸ்கரன், மற்றும் எஸ்.ஆனந்தி, மதுரை வடக்கு சட்டமன்ற உறுப்பினர் கோ.தளபதி, மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் மு.பூமிநாதன் ஆகியோர் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை சார்பில் மதுரை அறிவுரைக் குழும அலுவலக புதுப்பிக்கப்பட்ட தரைத்தள கட்டடத்தை துவக்கி வைத்து பார்வையிட்டனர்.

மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் புதிதாக நியமிக்கப்பட்ட மதுரை மாநகர் வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர்கள் மாவட்டச் செயலாளர், வடக்கு சட்டமன்ற உறுப்பினர் கோ தளபதி அவர்களை சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். உடன் வழக்கறிஞர் அணி அமைப்பாளர் தேவசேனன் மற்றும் வழக்கறிஞர்கள் உள்ளனர்.

தி.மு.க. சட்டத்துறை மேற்கு மண்டல

வழக்கறிஞர் அணி தேர்தல் கலந்தாய்வுக் கூட்டம்!

வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. - என்.ஆர். இளங்கோ எம்.பி. சிறப்புரை !

கோவை, பிப்.28-

தி.மு.க.சட்டத்துறை மேற்கு மண்டல வழக்கறிஞர் அணி தேர்தல் கலந்தாய்வுக் கூட்டம் இன்று நடைபெறுகிறது. இதில் மண்டல பொறுப்பாளர் வி. செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ, கழக சட்ட துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. ஆகியோர் சிறப்புரையாற்று கின்றனர்.

கரூர்,நாமக்கல்,ஈரோடு, திருப்பூர், கோயம்புத்தூர், நீலகிரி ஆகிய மாவட்டங்கள் உள்ளிட்ட மேற்கு மண்டலத்திற்குட்பட்ட கழக மாவட்டங்களுக்கான DLC, CLC, FLC வழக்கறிஞர்களுக்கான கலந்தாய்வு கூட்டம் இன்று (28.02.2026-சனிக் கிழமை) காலை 10.00 மணியளவில் கோவை, கோல்ட் வின்ஸ், அவினாசி சாலையில் உள்ள ராமலக்ஷ்மி மஹால் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

நிகழ்வுகளை மேற்கு மண்டல பொறுப்பாளர் வி.செந்தில்பாலாஜி எம். எல்.ஏ.அவர்கள் துவக்கி வைத்து உரையாற்றுகிறார்.

மூத்த வழக்கறிஞர் மாநிலங்களவை உறுப்பினர்கழக சட்டத்துறை செயலாளர் என். ஆர் இளங்கோ அவர்கள் தலைமை உரையாற்றுகிறார்.

கழக சட்டத்துறை இணைச் செயலாளர்கள், துணைச் செயலாளர்கள் மற்றும் தலைமை கழக வழக்கறிஞர்கள் வழக்கறிஞர் அணி மண்டல பொறுப்பாளர்கள் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

எனவே கழக வழக்கறிஞர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொண்டு நிகழ்வினை சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தேர்தல் குறித்த மிக முக்கிய ஆலோசனைக் கூட்டம் என்பதால் கழக மாவட்டம் வாரியாக வருகை பதிவேடு கட்டாயமாக்கப்பட்டுள்ளது. எனவே மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் (DLC)தங்கள் மாவட்டத்திற்கு உட்பட்ட கழக வழக்கறிஞர்களின் வருகை பதிவினை உறுதிப்படுத்திடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.